(iv) that persons who have worked for at least one year in a primary Health Centre or a similar institution and posted as Junior Registrars in the Employees State Insurance Hospital be treated on a par with the Senior House Surgeons, and on completion of one year of such work, they be deemed eligible for undergoing the post-graduate studies in recognised teaching institution;

(v) that not more than two years of service put in the hospital by the heads of units will be counted for appointment to teaching posts;

(vi) that continued recognition of the hospital for training House Surgeons will depend on the staff appointed which should be approved by the University. The Hospital should forward to the University half-yearly on 15th January and 1st August each year returns of staff in the pro forma prescribed and furnish such other returns as may be called for by the University from time to time;

(vii) that quarters should be provided for the House Surgeons posted to work in the hospital.

இந்த நிபந்தனைகளெல்லாம் இப்பொழுது ஆராயப்பட்டு வருகின்றன. விரைவிலே அதுபற்றி முடிவு செய்யப்படும்.

மாணவர்களுக்கு இலவச மருத்துவ சோதனை

* 252 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்களுக்கு வருடா வருடம் இலவச, கட்டாய மருத்துவ சோதனை கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், மாணவர்களுக்கு ஏற்கெனவே ஐந்து வருஷங்களுக்கு ஒருமுறை 'மெடிகல் செக்கப்' செய்து எந்தெந்த வியாதிகள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து, அதன்மீது சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது மீண்டும் இல்லையென்றாலும், அதுபோன்ற அடிப்படையிலே அவர்களைச் செக் செய்து போதுமான மருத்துவ சிகிச்சை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கட்டாயமாக மருத்துவ ஆய்வு நடத்தப்படவேண்டுமென்ற நிலை இல்லை. Medical aid scheme on a voluntary basis என்ற முறையில் 3 மாவட்டங்களில், ஈரோடு, நாமக்கல், மதுரை ஆகிய இடங்களில் பரீட்சார்த்தமாக வைக்கப்பட்டு, Mobile Medical Unit மூலமாக இந்த ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. இந்த முன்னே

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

டித் திட்டம் சரியாக நடைபெற்றால் மற்ற எல்லா மாவட்டங்களிலும் அந்தத் திட்டத்தைப் புகுத்த அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

கண் நோயைப்பற்றி மதுரையிலே இருக்கிற டாக்டர் வெங்கடசாமி அவர்கள் ஒரு திட்டம் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு இரண்டு மூன்று வார காலம் அளிக்கப்படும் பயிற்சியால் அவர்கள் மாணவர்களைச் சோதித்து மாணவர்களுக்கு கண் பழுதுபட்டு இருக்கிறதா என்று ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கத் திட்டம் வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டு மதுரை நகரைப் பொறுத்தவரையில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது வெற்றி பெற்றால் பிறகு பிற இடங்களிலும் பரப்பலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

Remains of Pallava Age.

* 253 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the remains of the Pallava Civilisation were excavated at Vasavasamudram in Chingleput District at the Palar river bed; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை. ரோம் நாட்டு புதைப்பொருள்கள் சில தோண்டி எடுக்கப்பட்டன.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: தலைவரவர்களே, இந்த பல்லவர் காலத்து சிலைகளிலே ஐந்தில் ஒரு பாகம் தங்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? பொதுமக்களால் கண்டு பிடிக்கக்கூடிய அந்தச் சிலைகளில் ஆராய்ச்சியாளர்கள் தங்கம் இருப்பதாகச் சொல்லப்படுவதாகப் பத்திரிகையில் செய்தி வருகிறது, அப்படி வரக்கூடிய சிலைகள் கடைசி நேரத்திலே பித்தளை சிலைகளாக மாறி இருக்கின்றன என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படி மாறியதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் துணைக்கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனியாகக் கேள்விபோட்டால் அதுபற்றி விவரங்கள் சேகரித்துத் தர முடியும். அந்த இடத்தில் சிலைகள் அகப்படவில்லை. பல்லவ காலத்துச் சின்னம் ஒன்றும் அகப்படவில்லை. பாலாற்றினுடைய முகத்துவாரப் பகுதியில், வசவசமுத்திரம் என்ற இடத்திலே தோண்டிக்கொண்டிருக்கும்பொழுது மட்பாண்டங்களும், மற்ற சில பொருள்களும் கிடைக்கப்பெற்றன. அதுபற்றி ஆர்.டி.ஓ.-வுக்குச் சொல்லப்பட்டு, பிறகு தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்குத் தகவல் கொடுத்து, அவர்கள் சென்று பார்த்தபொழுது ரோம் நாட்டைச் சேர்ந்த ஜாடித்தூண்டுகளும், டிரெயினேஜ் பைப்ஸ் மற்றும் ரோம் நாட்டைச் சேர்ந்த மட்பாண்டங்கள்